**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பூபதி** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தோரணக்கல்பட்டி கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்த வருகிறேன். இதற்கு முன்பு ஏமூர் கிராமநிர்வாக அலுவலகராக பணிபுரிந்தேன். வேட்டமங்கலத்தில் 2020 ஆம் ஆண்டு கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 19.10.2020 அன்று நான் அலுவலகத்தில் இருந்த போது வேலாயுதம்பாளையம் காவல்ஆய்வாளர் காலை 7.05 மணிக்கு குற்றம்சாட்டப்பட்டவர்களை பிடித்து வைத்திருப்பதாகவும், நொய்யல் செல்லாண்டிஅம்மன் கோவிலுக்கு வரச்சொன்னதன் பேரில் நான் அங்கு

அரைமணி நேரத்தில் நானும் எனது பக்கத்து கிராம உதவியாளர் அருண்குமாருடன் செல்லாண்டிஅம்மன் கோவிலுக்கு சென்றோம். அங்கு கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தாவுத், கோகுல்நாத் ஆகியோரை கைது செய்து வைத்திருந்தார்கள். காவல் ஆய்வாளர் விசாரித்த போது முதலில் கலையரசன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலம் முடிந்த பிறகு பிரசாந்த் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். பின்னர் பிரசாத் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். பின்னர் ஷேக்தாவுத் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். மேலும் ஷேக்தாவுத்திடமிருந்து சூரிக்கத்தியை ஆய்வாளர் கைப்பற்றினார். அதனை நான் அடையாளம் காட்டுகிறேன். அது சில்வர் கைப்பிடி போட்ட கத்தி ஆகும். **அது இதுதான் அது அ.சா.பொ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கோகுல்நாத் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். கலையரசன், பிரசாந்த், பிரசாத், ஷேக்தாவுத், கோகுல்நாத் ஆகியோர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர்களது கூட்டாளியான ரஞ்சித்குமாருடன் மது அருந்திகொண்டிருந்தபோது ஏற்பட்ட சண்டையில் ரஞ்சித்குமாரை வேலாயுதம்பாளையம் டீக்கடை அருகில் வெட்டிக்கொன்றுவிட்டதாக வாக்குமூலம் அளித்தார்கள். கலையரசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் என் உதவியாளருடையது. **என்னுடைய கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரசாந்த் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது

கையொப்பம் என் உதவியாளருடையது. **என்னுடைய கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரசாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் என் உதவியாளருடையது. **என்னுடைய கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஷேக்தாவுத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் என் உதவியாளருடையது. **என்னுடைய கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கோகுல்நாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் என் உதவியாளருடையது. **என்னுடைய கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்களில் எதிரிகளும் கையொப்பம் செய்தார்கள். கலையரசன் அவர் வண்டியில் வைத்திருந்த வேஷ்டி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் கைப்பற்றினார். கலையரசனிமிருந்து கைப்பற்றப்பட்ட வண்டி எண். TN 47 AT 5008 ஸ்டார் ஸ்போர்ட். மேற்சொன்ன வாகனத்தினை அடையாளம் காட்ட இயலும். **வண்டியின் புகைப்படங்கள் கூடிய மேற்சொன்ன வாகனம் இது தான். அது அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கலையரசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட வேஷ்டி இதுதான். அது அ.சா.பொ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கலையரசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரசாந்த் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்

**பிரசாந்திடமிருந்து கைப்பற்றப்பட்ட ஜீன்ஸ் பேண்ட் இதுதான். அது அ.சா.பொ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரசாந்திரடமிருந்து TN47 AQ 8502 என்ற பதிவு எண் கொண்ட வண்டியை கைப்பற்றினார்கள். அந்த வண்டியின் புகைப்படம் இது தான். அது அ.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரசாந்த் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரசாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பிரசாத்திடமிருந்து TN48 J 1796 என்ற பதிவு எண் கொண்ட வண்டியை கைப்பற்றினார்கள். **அந்த வண்டியின் புகைப்படம் இது தான். அது அ.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன வண்டியை மகஜர் தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரசாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஷேக்தாவுத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஷேக்தாவுத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட **நீல கலர் ஜீன்ஸ் பேண்ட் இதுதான். அது அ.சா.பொ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஷேக்தாவுத்திடமிருந்து மேலும் சூரிக்கத்தியை கைப்பற்றினார் அந்த சூரிக்கத்தி இதுதான். அது அ.சா.பொ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஷேக்தாவுத்**

**அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கோகுல்நாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கோகுல்நாத்திடம் கைப்பற்றப்பட்ட **கருப்பு கலர் ஷேடோ ஜீன்ஸ் பேண்ட் இதுதான். அது அ.சா.பொ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோகுல்நாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மூர்த்திப்பாளையம் ரோட்டில் உள்ள 7 கன்னிமார்கள் கோவில் அருகில் ஒரு வாள் கத்தியும், ஒரு வீச்சருவாளும் கலையரசன் எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் ஆய்வாளர் அதனை கைப்பற்றி ஒரு கைப்பற்றுதல் மகஜர் தாயர் செய்தார் அதில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வாள் கத்தி இதுதான். அது அ.சா.பொ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வீச்சருவாள் இதுதான். அது அ.சா.பொ.17 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்த போது நான் வேட்டமங்கலம் கிராமநிர்வாக அலுவலகத்தில் இருந்தேன். வேட்டமங்கலம் கிராமநிர்வாக அலுவலகத்திலிருந்து நொய்யல் செல்லாண்டி அம்மன் கோவில் 2 முதல் 3 கிலோமீட்டர் தூரம் இருக்கும். வேட்டமங்கலம் கிராமத்திற்கும் நொய்யல் செல்லாண்டி அம்மன் கோவிலுக்கும் இடையே ரயில்வே கேட் உள்ளது எ

ன்றால் சரிதான். நொய்யல் செல்லாண்டி அம்மன் கோவிலிருந்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையம் 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. வேட்டமங்கலம் கிராமநிர்வாக அலுவலர் அலுவலகத்திலிருந்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையம் 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நொய்யல் கிராமத்திற்கு தனியாக கிராமநிர்வாக அலுவலர் கிடையாது. நொய்யல் செல்லாண்டி அம்மன் கோவில் தள்ளித்தான் கடைகள் வீடுகள் உள்ளது. கோவில் அருகில் வீடுகள் இல்லை. பொதுவாக காவல்துறையினர் அழைக்கும்போது வட்டாட்சியரிடம் சொல்லிவிட்டுதான் செல்வோம். நீங்களும் உங்கள் உதவியாளரும் ஒரே பைக்கில் தான் செல்லாண்டி அம்மன் கோவிலுக்கு சென்றீர்களா என்றால் சரிதான். செல்லாண்டி அம்மன் கோவிலுக்கு செல்லும்போது அங்கு 4, 5 காவல்துறையினர் இருந்தார்கள். பொதுமக்கள் அருகில் இல்லை தூரத்தில் சென்று கொண்டிருந்தார்கள். எதிரிகள் ஜீன்ஸ் பேண்ட், கருப்பு நிற வேஷ்டி ஆகியவற்றை கையில் வைத்திருந்தார்களா என்றால் சென்ற பின் எடுத்துக்கொடுத்தார்கள். நான் செல்லும்போது கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனங்கள் அங்கு தான் இருந்தது. எதிரிகள் எந்த உடை அணிந்திருந்தார்கள் என்று சரியாக ஞாபகமில்லை. அங்கு இருந்த எதிரிகள் புதிதாக ஆடைகள் எதையும் கையில் வைத்திருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. நொய்யல் செல்லாண்டி அம்மன் கோவிலுக்கும், ஆத்தூர் 7 கன்னிமார் கோவிலும் எந்த திசையில் உள்ளது என்றால் வேட்டமங்கலத்திலிருந்து கரூர் செல்லும் ரோட்டில் 7 கன்னிமார் கோவில் தெற்கில் உள்ளது. 7 கன்னிமார் கோவிலை ஒட்டி ரயில் தண்டவாளம் அரை கிலோமீட்டர் தள்ளி உள்ளது. 7 கன்னிமார் கோவிலை ஒட்டி மானாவாரி நிலங்கள் தான் உள்ளது. வாள் கைப்பற்றிய இடம் ரயில்வேக்கு சொந்தமான இடமா அல்லது தனியாருக்கு சொந்தமான இடமா என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. ஆத்தூர் 7 கன்னிமார் கோவில் அமைந்துள்ள கிராமத்தில் தனி கிராமநிர்வாக அலுவலர் உள்ளார். வாள் கைப்பற்றிய இடத்திற்கும் நீங்கள் சென்ற வாகனம் எந்த இடத்தில் நின்றது என்றால் ஞாபகமில்லை. வாள் கைப்பற்றிய இடம் வாகனத்திலிருந்து இறங்கி சற்று தூரம் தள்ளி முட்புதரில்தான் வாளும், கத்தியும் கைப்பற்றப்பட்டது. வாள் கைப்பற்றிய இடம் தரிசு நிலம் என்றால் சரியல்ல அது முட்புதர்தான். நீங்கள் கூறியது போல் எதிரிகள் கைது செய்யப்படுவில்லை என்றும் அவர்கள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்ற சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி பக்கத்தில்தான் நாங்கள் கையொப்பம் செய்தோம். எதிரிகள் அவரவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் எல்லா பக்கங்களிலும் கையொப்பம் செய்தார்கள். என் அலுவலகத்தில் எனக்கு தனி முத்திரை உள்ளது. நான் சாட்சியாக கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜர்களிலும் என் அலுவலக முத்திரை வைக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.01 17:33:12 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.